# *புனித மரிமதலேன் (1726 – 1846)*

ஏழை மக்களுக்கு நல்ல கல்விப் பயிற்சியளிக்கப்பட வேண்டும். பிரான்ஸ் நாட்டில் பிறந்த இவள் இந்த உண்மையை அறிந்திருந்தாள். இவளது கிராமத்தைச் சேர்ந்தவர்கள் மீன் பிடித்து வாழ்ந்து வந்தார்கள். ஏழைப் பெண்களுக்காக இவள் ஒரு பள்ளிக்கூடத்தைத் தொடங்கினாள். இவள் தன் மாணவிகளின் அன்பைப் பெற்றாள். அவர்களுக்கு நல்ல பயிற்சி அளித்து அவர்கள் சிறந்த தாய்மார்களாக உதவி செய்தாள். 60 ஆண்டுகளாக நாள்தோறும் ஒரு முறையே உணவு அருந்தி வந்தாள். பிரான்ஸ் நாட்டில் புரட்சி தொடங்கியது. அப்பொழுது இவள் மக்களுக்கு மறை உண்மைகளைக் கற்பித்து வந்தாள். துன்புறுத்தப்பட்ட குருக்களுக்கு பாதுகாப்பு இடம் அளிப்பாள். அவர்கள் இங்கிலாந்துக்கு போக உதவி செய்வாள். திவ்விய நற்கருணை இவளிடம் ஒப்படைக்கப்பட்டது. மாசற்றவர்களது இரத்தம் வடிக்கப்பட்ட அக்காலத்தில் திவ்விய நற்கருணையை இவள் தன்னுடன் எடுத்துச் செல்வாள். சாகும் தறுவாயில் இருந்தவர்களுக்கு அதைக் கொடுப்பாள். சிறுவர்களுக்கு கல்வி கற்பிக்க கன்னியர் சபை ஒன்றை ஏற்படுத்தினாள்.

**சிந்தனை:**

சாகிற அனைவரும் வழி உணவாக திவ்விய நன்மை உட்கொண்டு சாத்தானின் தாக்குதல்களை செயிக்கும்படி அடிக்கடி மன்றாடுவோம்.

**செபம்:**

மரண அவஸ்தைப்பட்ட இயேசுவின் திரு இருதயமே, இன்று மரிக்கிறவர்கள் மீது இரக்கமாயிரும்.